# பத்தாம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வு – மார்ச் 2018
## தமிழ் முதற்றாள் - விடைக்குறிப்பு
**மொத்த மதிப்பெண்கள் : 100**

முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, நா.ம.மே.பள்ளி, ஏழாயிரம்பண்ணை, விருதுநகர் மாவட்டம்

பிரிவு – I (மதிப்பெண்கள் : 20)

| | | |
|---|---|---|
| பகுதி – 1 | | 6 x 1 = 6 |
| I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | | |
| 1 | (அ) பெரியபுராணம் | 1 |
| 2 | (ஆ) திருநாவுக்கரசர் | 1 |
| 3 | (அ) பாடாண்திணை | 1 |
| 4 | (ஆ) பெரியார் | 1 |
| 5 | (ஆ) திரு. வி. க. / (இ) பேரறிஞர் அண்ணா (இரண்டில் ஒன்று) | 1 |
| 6 | (ஆ) தேவாரம் | 1 |

| | | |
|---|---|---|
| பகுதி – 2 | | 6 x 1 = 6 |
| II . கோடிட்ட இடத்தை நிரப்புக | | |
| 7 | தைத்திங்கள் இரண்டாம் | 1 |
| 8 | குகப்படலம் / கங்கைப்படலம் | 1 |
| 9 | கரடி | 1 |
| 10 | மாக்சுமுல்லர் | 1 |
| 11 | சிரவண பிதுர்பத்தி | 1 |
| 12 | திருமூலர் | 1 |

| | | |
|---|---|---|
| பகுதி – 3 | | 4 x 1 = 4 |
| III . பொருத்துக | | |
| 13 | கவிகை – குடை | 1 |
| 14 | அரியாசனம் – சிங்காதனம் | 1 |
| 15 | துகிர் – பவளம் | 1 |
| 16 | சாய்க்காமை – அழிக்காமை | 1 |

| | | |
|---|---|---|
| பகுதி – 4 | | 4 x 1 = 4 |
| IV . விடைக்கேற்ற வினா அமைக்கவும் (ஏற்ற வினா அமைத்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | | |
| 17 | எல்லா மனிதர்களையும் எம்மாதிரி நடத்துவதே சமத்துவமாகும்? | 1 |
| 18 | படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்? | 1 |
| 19 | வள்ளலாரின் இயற்பெயர் யாது? | 1 |
| 20 | பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் எது? | 1 |

பிரிவு – II (மதிப்பெண்கள் : 20)

| | | |
|---|---|---|
| பகுதி – 1 | | |
| V. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | 5 x 2 = 10 |
| 21 | ❖ முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களுள் (ஏற்புடைய நான்கு மட்டும்) | 2 |
| 22 | ❖ என்றும் இடும்பை தருவது தீயொழுக்கமாகும். | 2 |

| | | |
|---|---|---|
| 23 | ❖ கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்<br>❖ விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்<br>❖ கல்வியிற் பெரியர் கம்பர் (ஏதேனும் இரண்டு மட்டும்) | 2 |
| 24 | ❖ கைம்மலர்கள் தலைமேல் குவிந்தன<br>❖ கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி வழிந்தது<br>❖ உரைதடுமாறியது, உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய<br>❖ தரையில் வீழ்ந்து திருநாவுக்கரசரது திருவடித் தாமரைகளைத் தம் தலையால் வணங்கினார். | ½<br>½<br>½<br>½ |
| 25 | போலிப்புலவர்களை<br>❖ குட்டுபவர் - அதிவீரராம பாண்டியன் / பிள்ளைப்பாண்டியன்<br>❖ செவியை அறுப்பவர் - வில்லிபுத்தூரார்<br>❖ தலையை வெட்டுபவர் - ஒட்டக்கூத்தர் | 2 |
| 26 | ❖ **சிவபெருமான்**<br>❖ எவர்க்கும் அடிமையாகாதவன்<br>❖ சங்கரன் என்னும் பெயரையுடையவன்<br>❖ ஒருகாதில் வெண்சங்கை அணிந்திருப்பவன் | 1<br>½<br>½ |
| 27 | ❖ நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | 2 |

| பகுதி – 2 | | |
|---|---|---|
| VI. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | 5 x 2 = 10 |
| 28 | ❖ தமிழ், கன்னடம், தெலுங்கு, துளுவம், மலையாளம்<br>❖ தாய்மொழியாகத் திகழ்வது - தமிழ் | 1<br>1 |
| 29 | ❖ ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும்.<br>❖ எடுத்துக்காட்டு: உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம். | 1<br>1 |
| 30 | ❖ குமரிமலை<br>❖ ப∴றுளி ஆறு | 1<br>1 |
| 31 | ❖ விமானியால் செலுத்தப்படாத வானூர்தி.<br>❖ தற்போதைய செயற்கைக்கோளைப் போன்றது எனக் கருத இடமுன்று. | 1<br>1 |
| 32 | ❖ "தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது" | 2 |
| 33 | ❖ சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். | 2 |
| 34 | ❖ **மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை**.<br>❖ **குறிப்பாகப்** பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகளைத் தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, கலைஅறிவியல் கல்வி, சிறுதொழில்கல்வி **என பலவாகப்** பகுக்கலாம். | 1<br>1 |

பிரிவு – III **(மதிப்பெண்கள் : 24)**

| பகுதி – 1 | | |
|---|---|---|
| VII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | | 3 x 4 = 12 |
| 35 | ❖ தமிழில் நூல்களை எளிய நடையில் எழுதுதல் வேண்டும்.<br>❖ இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல் வேண்டும்.<br>❖ புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி நூல்கள் பல வெளியிடவேண்டும்.<br>❖ பல்வேறு துறைநூல்களைப் பிறர்துணையின்றி எல்லோரும் படிக்கும் வகையில் தமிழில் வெளியிடவேண்டும்.<br>❖ தமிழை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும்.<br>❖ இலவய நூல் கழகங்கள் ஊர்தோறும் ஏற்படுத்துதல் வேண்டும். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 36 | ❖ விரைந்து படகினைச் செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டளையிட்டான்.<br>❖ உயிரின் ஏவலுக்கு மெய் செயல்படுவதுபோலக் குகனும் படகினை விரைவாகச் செலுத்தினான்.<br>❖ மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளம் அன்னம் விரைந்து செல்வதனைப் போலப் படகு சென்றது.<br>❖ அவர்களின் பிரிவால் அனல்பட்ட மெழுகுபோல் துன்பமுற்று மறையோர் மனமுருகி நின்றார்கள். | 1<br>1<br>1<br>1 |
| 37 | ❖ பொன், பவளம், முத்து, மாணிக்கம் ஆகியன தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் இருப்பினும்<br>❖ மாலையாகக் கோத்து மதிப்புமிக்க அணிகலனாக அமைக்கும்போது தம்முள் ஒருங்கு சேரும்<br>❖ அதுபோல, சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர்<br>❖ சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர் | 1<br>1<br>1<br>1 |
| 38 | ❖ புலி முழங்கிடும் ஓசையினைக் கேட்ட அளவில்<br>❖ பெரிய காட்டெருமைகளும், பிளந்த பாதங்களையுடைய பன்றிகளும்<br>❖ அடர்ந்த முடிகள் நிரம்பிய கரடிகளும், கலைமான்களும்<br>❖ நிலத்தில் பதியப்பெற்ற தங்கள் கால்கள் தடுமாற்றமுற்று விழுந்து உடல் நடுக்கமடையும். | 1<br>1<br>1<br>1 |
| 39 | ❖ இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால் ஓர் இரவுக்குள் வழித்தடத்தில் என்னென்ன நேருமோ<br>❖ பணியை முடித்து ஓய்வு பெறுக தம்பி!<br>❖ இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் வந்து குவியும்<br>❖ செடிகள் பூப்பதற்குமுன் ஓய்வெடுப்பதில்லை, செடியின் வெற்றி பூவில் உள்ளதைப்போல், உன் வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும். | 1<br>1<br>1<br>1 |
| | பகுதி – 2 | |
| VIII. | எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | 3 x 4 = 12 |
| 40 | ❖ **பெருநோய்** என்பது **தொழுநோய்** ஆகும். இது பரவக்கூடிய தொற்றுநோயன்று. இது முற்றிலும் குணப்படுத்தக்கூடிய ஒன்றாகும். தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் - மணக்கொடையாகும்.<br>❖ பெற்றோர் பலர் தம் மகனின் கல்விக்காகப் பணம் செலவழிப்பதனைத் தங்கள் கடமையெனக் கருதாது அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர்.<br>❖ அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிடவேண்டுமென்று துடிக்கின்றனர்.<br>❖ இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல் பந்தயக்குதிரைகள்ாக மாறவேண்டும். “தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்”. | 1<br>1<br>1<br>1 |
| 41 | ❖ மராட்டிய மாநிலத்தில், இரத்தினகிரி மாவட்டத்தில் உள்ள அம்பவாடே<br>❖ 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் பதினான்காம் நாள்<br>❖ தாய் - பீமாபாய்<br>❖ தந்தை - இராம்ஜி சக்பால் | 1<br>1<br>1<br>1 |
| 42 | ❖ தொடக்கவுரைக்குப் பிறகு பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும்.<br>❖ அன்றலர்ந்த மலரை அழகுபட மாலையாகத் தொடுத்தல் இதற்கோர் எடுத்துக்காட்டாம்.<br>❖ மலர்களின் நறுமண வேறுபாடும் நிறவேறுபாடும் உணர்ந்து அவற்றை இடையிடையே அமைத்து மாலைகள் தொடுக்கப்படுதல் இயல்பு.<br>❖ அதுபோலவே, இடையிடையே சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுவதே தொடுத்தல் எனப்படும். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 43 | ❖ பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்<br>❖ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது திருக்குறள்<br>❖ தமிழர் உழுது பயிர்செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர்<br>❖ உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது.<br>❖ உழவுக்குச் சிறப்புப்பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது<br>❖ மருதநிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர். | 1<br>1<br>1<br>1<br><br>1 |
| 44 | ❖ கஸ்தூரிபாய் காந்தி ஆசிரமத்திற்கு வாங்கிய காய்கறிகளில் வழக்கத்திற்கு அதிகமாக ஓர் அணா செலவு செய்ததற்குக் காந்தியடிகள் கடிந்துகொண்டார்<br>❖ ஆசிரமத்தில் தாமே சமையல் செய்து அனைவர்க்கும் கொடுத்தார்<br>❖ கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றார், தம் கழிவுகளை வேறு ஒருவர் அகற்றவிடாமல் தாமே அகற்றினார்<br>❖ எழுதித்தேய்ந்த பென்சிலையும், சிறு காகிதத்தையும் வீணாக்காமல் அதில் கடிதங்களுக்கு மறுமடல் எழுதுவார். | 1<br><br>1<br>1<br>1 |
| | பிரிவு – IV | (மதிப்பெண்கள் : 10) |
| | IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக | 5 x 1 = 5 |
| 45 | (i) தொழிற்பெயர்<br>(ii) ஆற்றுதல், போற்றுதல்<br>(iii) கலித்தொகை<br>(iv) நல்லந்துவனார்<br>(v) சுற்றம் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 46 | கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க | 5 x 1 = 5 |
| | (i) இயல், இசை, நாடகம்<br>(ii) சிலப்பதிகாரம்<br>(iii) எளிய குடிமகனையும் குடிமகளையும்<br>(iv) அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்<br>(v) இந்நூல் (சிலப்பதிகாரம்) கூறும் கலைநுட்பச்செய்திகள் | 1<br>1<br>1<br>1<br>1 |

பிரிவு – V (மதிப்பெண்கள் : 26)

| | | |
|---|---|---|
| | பகுதி – 1 | 2 x 8 = 16 |
| | **X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்** | |
| 47 (அ) | **காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.** | 8 |
| 47 (ஆ) | **(அல்லது)**<br>**புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.** | |
| 48 (அ) | **அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்** | 8 |
| 48 (ஆ) | **(அல்லது)**<br>**கலை அறிவியல் கல்வி, சிறு தொழில்கல்வி குறித்து: விவரிக்கவும்.**<br>**கலை அறிவியல் கல்வி:**<br>★ பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றோர் கணிதம், இயற்பியல், வேதியியல், பொருளியல், வரலாறு, தமிழ், ஆங்கிலம் போன்ற பிரிவுகளில் பட்டம் பெறலாம்.<br>★ பின்பு இளநிலைக் கல்வியியல் பட்டம் (பி.எட்) பெற்று ஆசிரியர் ஆகலாம். | |

| | | |
|---|---|---|
| | ★ வங்கித் துறை, ஆயுள் காப்பீடு, தொடர் வண்டித் துறை, தமிழக, மத்திய அரசுத் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு துறைகளில் போட்டித் தேர்வு மூலம் பணியில் சேரலாம்.<br>★ மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.<br>**சிறுதொழில் கல்வி:**<br>★ பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பணியில் சேரலாம்.<br>★ கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையர், தச்சர் படிப்புகளும் இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது நீக்கும் படிப்புகளும் உள்ளன.<br>★ அரசுப் பணிக்காகக் காத்திருக்காமல் சுயதொழில் தொடங்கி நூற்றுக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம். | |
| | பகுதி – 2 | (மதிப்பெண்கள்:10) |
| 49 | **பின்வரும் மனப்பாடப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.** | |
| அ) | **ஒழுக்கத்தின்** எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்<br>எய்துவர் எய்தாப் பழி. | 2 |
| ஆ) | பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்ல தில்லை **பொருள்.** **(அல்லது)**<br><br>அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து<br>தீதின்றி வந்த **பொருள்.** | 2 |
| இ) | **திருமறையோர்** அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்<br>பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற<br>அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த<br>தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார். | 6 |